தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
5 - SEP 1981
MADRAS-600 009

செவ்வாய்க்கிழமை, 1981 மார்ச் 24.

பங்குனி 11, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தகட்டூர் உயர்நிலைப் பள்ளி.

* 153 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த தகட்டூரில் 9 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உயர்நிலைப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், தோட்டம் ஆகியவைகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அவைகளை அமைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இப்பள்ளி முன்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாக இருந்து 1970 ஆம் ஆண்டு அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. சொந்தமான நிலமொன்று பள்ளிக்கென இல்லாததால் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க இயலவில்லை. பள்ளிக்குத் தேவையான நிலத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பள்ளிக் கட்டிடத்தைக் கட்டுவதற்கான நிலத்தை அறங்காவல் குழுவினிடமிருந்து பெற வேண்டியிருப்பதாகவும் அதில் பல சிக்கல்கள் இருப்பதாகவும் சொல்லப் படுகிறது. அதோடு ஆலய அறங்காவல் குழுவினர் இப்பள்ளிக் கட்டிடத்தைக் கட்டுவதற்குத் தர வேண்டிய பணத்தை ஒரு வங்கியில் போட்டு, அதை மீண்டும் வேறொரு வங்கி மாற்றித் தர வேண்டுமென்று கேட்கப்பட்டதால்,

இத்தகைய தடங்கல்கள் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது இச்சிக்கல் எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கிறது, எப்போது அந்தப் பள்ளிக் கட்டிடம் கட்டிமுடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தகட்டூரில் உள்ள அருட்திரு வைரவநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் இந்தப் பணி இருக்கிறது. இந்தப் பள்ளிக் கட்டிட நிதிக்காக ரூ. 14,500-க்கான காசோலையை அறங்காவல் குழு கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் முத்துப்பேட்டைக் கிளை மூலம் கொடுத்தது. ஆனால் அதை மாற்றி மாநில வங்கியின் தஞ்சைக் கிளைக்குத் தரும்படி கேட்டு அக்காசோலை அறங்காவல் குழுவிற்குத் திருப்பியனுப்பப்பட்டது. ஆனால் அக்காசோலை மீண்டும் மாற்றியனுப்பப்படவில்லை. இது குறித்து, பள்ளிக் கல்வி இயக்குநர் இந்து சமய அறநிலையத் துறையோடு தொடர்பு கொண்டிருக்கிறார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அறங்காவல் குழுவினிடமிருந்து சேர வேண்டிய தொகையான ரூ. 14,500 இதுவரை பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கான பணிக்கு எதுவாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இதன் காரணமாக அப்பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி தடங்கலுக்குள்ளாகி இருப்பதால், இதைத் தவிர்க்கும் வகையில் அரசே தன்னுடைய நிதியிலிருந்து இந்தத் தொகையை முதலில் அளித்துப் பிறகு திரும்பப் பெற முன்வருமா? அதன் மூலம் கட்டிடம் கட்டுவதற்கு அரசு உதவி செய்யுமா? அரசு இதில் எந்த நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசே தன்னுடைய நிதிப் பொறுப்பிலிருந்து கட்டிடத்தைக் கட்டித் தருவதென்றால், அதற்கென்று சில பிரையாரிட்டிகள் இருக்கின்றன. அதைப் பொறுத்துத்தான் அவ்வாறு செய்ய முடியும். இந்தப் பள்ளிமட்டும்தான் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதல்ல. பிரையாரிட்டி கொடுப்பதற்கு பல முறைகள் இருக்கின்றன. ஆயினும் இந்தப் பள்ளிக் கட்டிடத்தைப் பொறுத்த வரையில், இதை விரைவில் கட்டி முடிக்க மாற்று நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணா பற்றிய நூல்கள்

* 154 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடைய வாழ்க்கை வரலாறு நூல்கள் மற்றும் அவர்களுடைய கொள்கைகள், பேச்சுக்கள் அடங்கிய நூல்கள் அனைத்தையும் அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசே இலவசமாக வழங்க முன்வருமா?